**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண். 63/2023**

2024-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09-ம் நாள் வாதி சாட்சியாகிய வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு. சரவணன், உதவியாளர் நிலை 3 என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | முனுசாமி |
| வயது | - | 61 |
| கணவர்/தந்தை பெயர் | - | முருகப்பன் |
| கிராமம் | - | வடஇலுப்பை |
| வட்டம் | - | வெம்பாக்கம் |
| சாதி | - | |
| சமயம் | - | |
| தொழில் | - | |

09.01.2024

**வா.சா. 1**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி. என் தரப்பில் தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தை இவ்வழக்கில் ஒரு பாகமாக வாசித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். பிரமாணவாக்குமூலத்தில் சொன்ன சங்கதிகள் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 30.06.1998 தேதியிட்ட கிரைய ஆவணம் வாசாஆ 1. பட்டா எண். 443 ன் கணினி நகல் வாசாஆ 2. கணினி பட்டா எண். 1245 வாசாஆ 3. 23.03.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வாசாஆ 4. அதை 3ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி ஆகியோர் பெற்றுக்கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டை மற்றும் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பபட்டு திரும்பிய தபால் உறை வாசாஆ 5 வரிசை (3 எண்ணிக்கை). 4ம் பிரதிவாதியிடத்தில் செய்த மேல்முறையீட்டின் கை நகல் வாசாஆ 6 . 01.03.2023 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சார் பதிவாளர் அலுவலக நகல் வாசாஆ 7. 05.04.2023 தேதியிட்ட 2ம் பிரதிவாதியின் மேலெழுத்து வாசாஆ 8. பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.